# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2017, செத்தெம்பர் மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

## *2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்*

[*2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*ச.வ.ஒ. 30/2015*

### *1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

***1.*** *இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* — *சுருக்கப் பெயர்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் "ஒரு வாரத்துக்குள்" என்னும் சொற்கள் அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "நான்கு வாரங்களுக்குள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-* — *1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சட்டத்தின் 10 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

***3.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவானது, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.* — *முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*(1)* *(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "அந்த நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையோடு மூன்றைக் கூட்டிவரும் எண்ணிக்கை கொண்ட வேட்பாளர்களின் பெயர்களை முந்துரிமை ஒழுங்குப்படி எடுத்துக்காட்டுகின்ற ஒரு நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கலாம். அத்தகைய நியமனப் பத்திரம் பொருளளவில் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டவாறான 'அ' என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "தேர்தற்றொகுதிகளில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர்களையும் மாவட்ட நிரலிலும் தேர்தற்றொகுதி நிரலிலுமுள்ள வேட்பாளர்களின் பெயர்களையும் எடுத்துக்கூறுகின்ற இரு நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நியமனப்பத்திரங்கள் பொருளளவில் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்:*

ஆயின், அத்தகைய நிரல்களைச் சமர்ப்பிப்பதில், ஒவ்வோர் அரசியற் கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும், தேர்தற்றொகுதி நிரலிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டுத் தெரிந்தனுப்பப்படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஆறில் ஒன்றுக்குக் குறை யாதோரும், மாவட்ட நிரலிலுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்துக்குக் குறையாதோரும் பெண் வேட்பாளர்களாகவிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், மேலும், ஆறில் ஒரு சதவீதத்துக்கு அல்லது ஐம்பது சதவீதத்துக்கு நேரொத்ததாகவுள்ள எண்ணிக்கை ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்கும்பட்சத்தில், முழுவெண்ணானது ஏற்புடையற் பாலதான எண்ணாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், தேர்தல்கள் ஆணையாளர், வர்த்த மானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், பெயர் நியமனங்களைக் கோருகின்ற அதேநேரத்தில், ஒவ்வொரு நிருவாக மாவட்டம் தொடர்பிலும், ஒவ்வொரு பெயர் நியமன நிரலிலும் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைத்தல் வேண்டும்.";

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "நியமனப்பத்திரத்தில் எவ்வேட்பாளரின் பெயர் முதலாவதாகக் காணப்படு கின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சுயேச் சைக் குழுத் தலைவராகவுள்ள" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில் "அத்தகைய நியமனப் பத்திரத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மாவட்ட நிரலிலுள்ள வேட்பாளர்களின் பெயர்களை எடுத்துக்கூறி, அத்தகைய நியமனப்பத்திரத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) அதன் (5) ஆம் உட்பிரிவில், "அத்தகைய நியமனப் பத்திரத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மாவட்ட நிரலிலுள்ள வேட்பாளர்களின் பெயர்களை எடுத்துக்கூறி, அத்தகைய நியமனப்பத்திரத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(5) அதன் (7) ஆம் உட்பிரிவில், ''இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள 'அ' என்னும் படிவத்திலிருந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருந்து" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 3அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*''எல்லை நிர்ணய ஆணைக்குழு.*

3அ. (1) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் இச்சட்டம் தொடங்குவதிலிருந்து இரண்டு வாரங்களினுள் சனாதிபதியினால் நியமிக்கப்படும் (இது இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) எல்லை நிர்ணயக் குழுவொன்று இருத்தல் வேண்டும். இது, உயர்தொழில்சார் மற்றும் சமூகப் பன்வகைமை உட்பட, இலங்கைச் சமுதாயத்தினரின் பன்மைப் போக்குடைய பண்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவரான ஐந்து ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களுள் ஒருவர், குழுவின் தவிசாளராகச் சனாதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழுவானது, ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தையும், 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினரின் ஐம்பது (50) சதவீதத்துக்கு நேரொத்ததாகவுள்ளவாறான அத்தகைய எண்ணிக்கையினவான தேர்தற்றொகுதிகளாகப் பிரித்தல் வேண்டும்:

ஆயின், 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினரின் ஐம்பது (50) சதவீதத்துக்கு நேரொத்ததாகவுள்ள எண் ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருப்பின், அவ்வெண் மிகக்கிட்டிய முழுவெண்ணாக்கப்படுதல் வேண்டும்.

(3) குழுவானது, அத்தகைய ஒவ்வொரு தேர்தற்றொகுதிக்கும் பெயர்களைக் குறித்தளித்தல் வேண்டும்.

(4) நிருவாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிப்பதில் பின்வரும் காரணிகள் குழுவினால் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) ஒரு நிருவாக மாவட்டத்தின் ஏதேனும் பிரதேசத்தில், இன, மத அல்லது வேறு வகையாக அக்கறைப் பிணைப்பினால் ஒன்றுசேர்க்கப்பட்ட, ஆனால் அப்பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையினரான வாசிகளிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்த அம்சங்களில் வேறுபடுகின்ற கணிசமான அளவினரான ஆட்கள் உள்ளனரெனக் குழுவுக்குத் தோன்றுமிடத்து, குழுவானது, அத்தகைய நிருவாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிவிடலாம்.

(ஆ) அத்தகைய பிரிவிடுகையைச் செய்வதில், ஆணைக்குழு, பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(i) மாகாணத்தினுள்ளான நிருவாக மாவட்டங்களின் பல்வேறு தேர்தற்றொகுதிகளில் வதிகின்ற

ஆட்களின் எண்ணிக்கையிலான அளவொவ்வாமையை மிகக்குறைவானதாக்குவதன் விருப்புத் தன்மை; அத்துடன்

(ii) தேர்தற்றொகுதிகளின் புவியியல் சார் மற்றும் பௌதீகச் சிறப்புக் கூறுகள்.

(5) நான்காம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைக் கவனத்துட்கொண்டு, ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையதாகவிருக்கவேண்டிய தேர்தற்றொகுதியொன்றை உருவாக்குதல் தோதானதாகவுள்ளதெனக் குழுவானது கருதுமிடத்து, குழுவானது, ஏதேனும் நிருவாக மாவட்டத்துக்காக, விடயத்துக்கேற்ப, பல்லுறுப்பினர் தேர்தற்றொகுதியை அல்லது தேர்தற்றொகுதிகளை உருவாக்குதல் வேண்டும்.

(6) ஒரு நிருவாக மாவட்டத்தினுள்ளான ஒவ்வொரு தேர்தற்றொகுதியும், விடயத்துக்கேற்ப, ஒரு மாகாண சபைக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களை நேரடியாகத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(7) குழுவானது, அது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து நான்கு (4) மாதங்களினுள் இப்பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி அதன் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் அதன் அறிக்கையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(8) குழுவுக்குப் பொறுப்பிக்கப்பட்ட கருமங்களை முடிபுசெய்வதில் குழுவானது கருத்தொற்றுமையை அடைவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

(9) குழுவானது, அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை முடிபு செய்தல் வேண்டும்.

(10) குழுவானது, இப்பிரிவின் நியதிகளின்படி அதன் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், நிபுணர்களையும், தொழினுட்பக் குழுக்களையும், உபகுழுக்களையும் நியமித்தல் வேண்டும்.

(11) குழுவானது, அதன் அறிக்கையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; அவர், அத்தகைய அறிக்கை கிடைக்கப்பெற்றதிலிருந்து இரண்டு வாரங்களினுள் (சமுகமளிக்காதோர் உட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களினது முழு எண்ணிக்கையினரும் அதன் சார்பாக வாக்களித்து அவர்களினால் அது அங்கீகரிக்கப்படுவதற்காகப் பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும்.

(12) அறிக்கை பாராளுமன்றத்தில் இடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் பாராளுமன்றம் (11) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய அறிக்கையை அங்கீகரிக்காதவிடத்து, அப்போது, சபாநாயகர், பிரதான சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐந்தாட்களைக் கொண்டதும் பிரதம அமைச்சரின் தலைமையின் கீழானதுமான மீளாய்வுக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

(13) மீளாய்வுக் குழு, ஏதேனும் தேர்தற்றொகுதியின் பெயர்கள், எண்ணிக்கைகள் மற்றும் எல்லைகளுக்கான ஏதேனும் மாற்றம் செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(14) மீளாய்வுக்குழு, அதனால் கவனத்துட் கொள்ளப்படுவதற்காக அறிக்கையை அமைச்சர் ஆற்றுப்படுத்தியதிலிருந்து இரண்டு (2) மாதங்களினுள் (13) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அதன் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் அதன் அறிக்கையைச் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(15) மீளாய்வுக் குழுவின் அறிக்கையைப் பெற்றதன்மேல், சனாதிபதி, பிரகடனத்தின்மூலம், மீளாய்வுக் குழுவினாற் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்மீது அவ்வாறு உருவாக்கப்பட்ட தேர்தற்றொகுதிகளின் புதிய எண்ணிக்கை, ஒவ்வொரு தேர்தற்றொகுதியினதும் எல்லைகள், அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயர்கள் என்பவற்றை உடனடியாக வெளியிடுதல் வேண்டும்.

(16) ஒவ்வொரு நிருவாக மாவட்டமும் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையதாகவுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை பின்வருவதனைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய நிருவாக மாவட்டத்தினுள்ளான தேர்தற்றொகுதிகளின் எண்ணிக்கைக்குச் சமமாகவுள்ளவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள்; அத்துடன்

(ஆ) அத்தகைய நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி

தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறாக மாகாணத்தின் நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கென (இதனகத்துப்பின்னர் 'மேலதிக உறுப்பினர்கள்' எனக் குறிப்பீடுசெய்யப்படுபவர்களும்) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களுமான அத்தகைய எண்ணிக்கையினரான மேலதிக உறுப்பினர்கள்.

(17) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது (இதனகத்துப்பின்னர் "சுயேச்சைக் குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்ற எவரேனும் ஆட்கள் குழு, ஏதேனும் நிருவாக மாவட்டத்துக்காக மாகாண சபைகளின் உறுப்பினர்களினது ஏதேனும் தேர்தல் நோக்கங்களுக்காக, பின்வருவனவற்றை எடுத்துக்கூறுகின்ற இரு நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்:-

(அ) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "தேர்தற்றொகுதி நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினதும் பெயர்கள்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் 'மாவட்ட நிரல்' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்துள்ள, மூன்றைக் கூட்டிவரும் மேலதிக உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக அத்தகைய நிருவாக மாவட்டம் தொடர்பில் மேலதிக வேட்பாளர்களின் பெயர்கள்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"போட்டி யில்லாத தேர்தல்.

18. (1) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது ஒரு சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் மட்டும் தேர்தலுக்காகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களாக இருக்குமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் தேர்தற்றொகுதி நிரலி லுள்ள வேட்பாளர்கள் அம்மாகாண சபையின் உறுப் பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப் படுத் தப் பட் டவர் களா கவுள் ளரென வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், மாவட்ட நிரலில் பெயர்கள் காணப்படுகின்ற வேட் பாளர்களுள் எவர்கள், அம் மாகாணசபையின் மேலதிக உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டு மென, தெரிவத்தாட்சி அலுவலரினால் குறித்து ரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள் முடிபுசெய்யும்படி, அத்தகைய அங்கீ கரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரை கோருதலும் வேண்டும். தெரிவத் தாட்சி அலுவலரினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய செயலாளர் அல் லது குழுத்தலைவர் தமது முடிபை தெரிவத் தாட்சி அலுவலர் அத்தகைய வேட்பாளர்களை, அம் மாகாணசபையின் மேலதிக உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்து தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலரினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய செயலாளர் அல்லது குழுத் தலைவர் தமது முடிபை தெரிவிக்கத் தவறுமிடத்து, அப்போது, அம்மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மேலதிக உறுப்பினர்களின் எண்ணிக் கைக்குச் சமமாகவுள்ளவாறு, அத்தகைய மாவட்ட நிரலில் அவர்களின் பெயர்கள் காணப்படுகின்ற ஒழுங்குவரிசைப்படி அத்தகைய எண்ணிக்கையின ரான வேட்பாளர்கள், உறுப்பினர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். 58ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகள், விடயத்துக்கேற்ப அத்தகைய செயலாளரினால் அல்லது குழுத் தலைவரினால் செய்யப்பட்ட

ஏதேனும் நியமனத்திற்கு அல்லது இப்பிரிவின்கீழ் தெரிவத்தாட்சி அலுவலரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) தெரிவத்தாட்சி அலுவலர், பொருளளவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருக்கவேண்டிய விபரத்திரட்டொன்றை ஆணையாளருக்கு உடனடியாகச் செய்தல் வேண்டும் என்பதுடன், அவர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானியில் வெளியிடச் செய்தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் பந்தி (ஆ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலமும்:-

"(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அரசியற்கட்சியினதும் அல்லது சுயேச்சைக் குழுவினதும் பெயர்களும், அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்னமும், சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் "சுயேச்சைக் குழு" என்ற சொற்களும், வேறுபடுத்திக்காட்டும் இலக்கம் ஏதேனுமிருப்பின் அதுவும், அத்துடன் -

(i) ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் போட்டியிடுகின்ற ஒவ்வொரு கட்சியினதும் அல்லது சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர்களின் பெயர்களும் ; அத்துடன்

(ii) மாவட்ட நிரலில் உள்ளவாறாக ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்தில் காணப்படுகின்றவாறான அதே ஒழுங்குவரிசைப்படி, அத்தகைய கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்களின் பெயர்களும்;";

(ஆ) (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "வாக்கெடுப்பு மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்குமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தேர்தற்றொகுதிக்கான" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் வாக்கெடுப்பு மாவட்டத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் தேர்தற்றொகுதிக்காக" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(4) ஒவ்வொரு தேர்தற்றொகுதிக்குமான வாக்கெடுப்பு நிலையம் அல்லது நிலையங்கள், தெரிவத்தாட்சி அலுவலர், ஏதேனும் தேர்தற்றொகுதியிலான விசேட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய தேர்தற்றொகுதிக்கு வெளியேயுள்ள வாக்கெடுப்பு நிலையம்பற்றி முடிபு செய்தாலொழிய, அத்தகைய தேர்தற்றொகுதியினுள் அமைந்திருத்தல் வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தின் அமைவிடம், தேர்தற்றொகுதியிலுள்ள தேருநர்களுக்கு ஆகக்குறைந்த வசதியீனத்தை விளைவிக்கின்ற அத்தகையதாதல் வேண்டும்:

ஆயின், தேர்தல்கள் ஆணைக்குழு, எல்லா நேரங்களிலும், ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தற்றொகுதிகள் தொடர்பில் வாக்கெடுப்பு நிலையமொன்று தாபிக்கப் பட வேண்டுமெனப் பணிப்பதற்குத் தத்துவம் கொண் டிருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் உள்ள ஒழுங்குவிதிகளால்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படு கின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இச்சட்டத் துக்கான மூன்றாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத் திலானதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சட்டத் தினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலானதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும்:-

"(ஆ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அரசியற் கட்சி யினதும் அல்லது சுயேச்சைக் குழுவினதும் பெயர்களையும், அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவுக்கும் குறித் தொதுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்னத் தையும், சுயேச்சைக் குழுவொன்றின் விடயத் தில் "சுயேச்சைக் குழு" என்ற சொற்களையும் வேறு பிரித்துக்காட்டும் இலக்கம் ஏதேனு மிருப்பின் அதையும், அத்துடன்

(i) ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு கட்சியினதும் அல்லது

சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர்களின் பெயர்களையும்; அத்துடன்

(ii) ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்தில் காணப்படுகின்றவாறான அதே ஒழுங்குவரிசைப்படி, அத்தகைய கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்களினது பெயர்களையும்,".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள 'இ' என்னும் படிவத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(அ) நிருவாக மாவட்டத்தில் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும், அத்தகைய தேர்தற்றொகுதி தொடர்பில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு கட்சியினதும் அல்லது குழுவினதும் வேட்பாளர்களின் பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள 'ஈ' என்னும் படிவத்திலான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''இச்சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையில் வாக்காளர்களுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வாக்காளர்களுக்கு'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் வாக்காளர்களுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வாக்காளர்களுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையில் வாக்காளர்களுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வாக்காளர்களுக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில், ''இச்சட்டத்துக்கான நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டவாறான உ, ஊ மற்றும் எ என்னும் படிவங்களில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட படிவங்களில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

***14***. முதன்மைச் சட்டவாக்கத்தின் *43* ஆம் பிரிவு, "இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏ என்னும் படிவத்தில் மற்றும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்ட வணையில் தரப்பட்டுள்ள ஐ என்னும் படிவத்தில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "சட்டத்தினால் விதித்துரைக் கப்பட்ட படிவத்தில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

***15***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணை யில் தரப்பட்டவாறு பொருளளவில் "ஒ'' என்னும் படிவத்தி லான''என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட படிவங்களிலான'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

***16***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (5) ஆம் உட்பிரிவில், "அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினதும் முந்துரிமை வாக்குகளையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் நிருவாக மாவட்டத்தின் முழுமை தொடர்பிலும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (6) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளில், "நிருவாக மாவட்டத்துக்கான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிருவாக மாவட்டத்துக்கான அல்லது தேர்தற்றொகு திக்கான'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (8) ஆம் உட்பிரிவில்-

(அ) ''அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட முந்துரிமைகள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் நிருவாக மாவட்டத்தின் முழுமை தொடர்பிலும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "சுயேச்சைக் குழுவினாலும் வாக்கெடுப்பில் அத்தகைய ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்கெடுப்பில் குழுவினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவின், (ஆ) என்னும் பந்தியில், "வாக்குச்சீட்டுப் பெட்டிகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் வாக்குச்சீட்டுப் பெட்டிகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (5) ஆம் உட்பிரிவில், "வாக்குச்சீட்டுக்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் வாக்குச்சீட்டுப் பத்திரங்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையில் வாக்காளர்களுக்கான வழிகாட்டுகை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்காளர்களின் வழிகாட்டுகை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (7) ஆம் உட்பிரிவில், "சுட்டிக்காட்டப்பட்ட முந்துரிமைகளின் எண்ணிக்கையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் அளிக்கப்பட்ட வாக்குகள் தொடர்பில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (8) ஆம், (9) ஆம், (10) ஆம் உட்பிரிவுகளை நீக்கு வதன் மூலமும்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, அதன் (ஏ) என்னும் பந்தியில், "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமைகளின் எண்ணிக்கை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் பெறப்பட்ட வாக்குகள் தொடர்பில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, "இச்சட்டத் துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள" மற்றும் "தெரிவத்தாட்சி அலுவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே, "சட்டத்தினால் விதந்துரைக்கப்பட்ட" மற்றும் "ஒவ்வொரு தேர்தற்றொகுதி தொடர்பிலும் தனிவேறாக வாக்குகள் எண்ணப்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில், தெரிவத்தாட்சி அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அத்துடன் அத்தகைய ஒவ்வொரு கட்சி யாலும் அல்லது சுயேச்சைக் குழுவாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளருக்கும் சுட்டிக்காட்டப்பட்ட முந்துரிமைகளின் எண்ணிக்கையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு தேர்தற் றொகுதி தொடர்பிலும் பெறப்பட்ட வாக்குகள் தொடர்பில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரு வதனை இடுவதன்மூலமும்:-

"(ஆ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக்குழுவை சேர்ந்தவரும் ஒவ்வொரு தேர்தற்றொகுதியிலும் ஆகக்கூடுதலான எண்ணிக்கையினதான வாக்குகளைப் பெற்றுக் கொண்டவரும், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவினால் அதன் நியமனப் பத்திரத்தில் அத்தகைய தேர்தற்றொகுதிக்கு அதன் வேட்பாளராகப் பெயர் குறிக்கப்பட்டவருமான வேட்பாளர், அத்தகைய தேர்தற்றொகுதிக்கு ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு இடையே வாக்குகள் சமமாகவிருப்பதாகக் காணப்படுமிடத்தும், ஒரு வாக்கைச் சேர்த்தல் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளரை அத்தகைய தேர்தற்றொகுதியொன்றின் உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பதற்கு உரித்துடையவராக்குமிடத்தும், அந்த மேலதிக வாக்கு எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட வேண்டுமோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தீர்மானித்தலானது, பிரதான வாக்கெண்ணும் அலுவலரின் முன்னிலையில், அவர் தீர்மானிக்கவேண்டிய வாறான அத்தகைய முறையில், திருவுளச் சீட்டிழுப்பின்மூலம் செய்யப்படுதல் வேண்டும்.".

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 58அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 58அ மற்றும் 58ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"மாகாண சபை உறுப்பினர் களின் தேர்தல்.

58அ. (1) ஐம்பத்தெட்டாம் பிரிவின்கீழான வெளிப்படுத்துகையின்மேல், நிருவாக மாவட்டத்தின் எல்லா தேர்தற்றொகுதிகளுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட மேலதிக உறுப்பினர்கள், இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பகிர்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) நிருவாக மாவட்டத்திலுள்ள ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர்கள் எல்லோரினாலும் பெறப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கை, அத்தகைய நிருவாக மாவட்டத்திலிருந்து மாகாணசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினரால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரிவிடுகையிலிருந்து விளைகின்ற எண் (ஏதேனும் பின்னம் கவனத்துக்கெடுக்கப்படாமல்) இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "தகைமையளிக்கும் எண்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(3) அந்தந்த தேர்தற்றொகுதிகளில் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர்களினால் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தம், அத்தகைய நிருவாக மாவட்டத்திலிருந்து, மாகாண சபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு உரித்துடையவர்களாகவுள்ள ஆட்களின் எண்ணிக்கையை நிச்சயிப்பதற்கென, அப்போது தகைமையளிக்கும் எண்ணினால் பிரிக்கப்படுதல் வேண்டும். இம்முறைமூலம் நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கை ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் உள்ளவிடத்து, முழுவெண்ணானது, இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்கான எண்ணாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி, விடயத்துக்கேற்ப, ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் அம்மாகாண சபையின் உறுப்பினர்களாக, அத்தகைய நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்படுவதற்கு உரித்துடைய வேட்பாளர்களின் எண்ணிக்கையை நிச்சயிப்பதன்மேல், அம்மாகாண சபைக்காக அத்தகைய நிருவாக மாவட்டத்திலிருந்து அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை-

(அ) (3) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்பட வேண்டியவர்களென நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுகின்றதெனக் காணப்படின், அப்போது, அத்தகைய மேன்மிகை, தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) (3) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்பட வேண்டியவர்களென நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை குறைவானதெனக் காணப்படின், அப்போது, அத்தகைய மேலதிக எண்ணிக்கையினரான உறுப்பினர், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்ற வேட்பாளர்கள் தவிர, தேர்தற்றொகுதி நிரலில் அல்லது மாவட்ட நிரலில் உள்ள வேட்பாளர்களிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் முறையான செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவரினால் தெரிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால், (3) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட முறையின்மீது தெரிந்தனுப்பப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிச்சயித்தல் முடிவடைவதன்மேல், (4) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்கீழ் தெரிந்தனுப்பப்படவேண்டிய மேற்கொண்ட எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் எஞ்சியுள்ளவிடத்து, அத்தகைய எஞ்சியுள்ள எண்ணிக்கை, (3)ஆம் உட்பிரிவின்கீழ் நிச்சயிக்கப்பட்டவாறு, ஒவ் வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட அதியுச்சப் பின்னத்தின் அடிப்படையில் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(6) தெரிவத்தாட்சி அலுவலர், இப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் நிச்சயிக்கப்பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துள்ள, விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது உறுப்பினர்களாகவிருப்பதற்குத் தகைமையற்ற வேட்பாளர்கள் தவிர, தேர்தற்றொகுதி நிரலின் அல்லது மாவட்ட நிரலின் வேட்பாளர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுத் தெரிந்தனுப்பப்படுவதற்கு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு உரித்துள்ள, விடயத்துக்கேற்ப, பெண் உறுப்பினர்கள் உட்பட உறுப்பினர்களின் எண்ணிக்கைபற்றி அறிவித்தல் வேண்டும். விடயத்துக்கேற்ப, செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுத்தலைவர், அதற்கிணங்க, அவ்வுட்பிரிவின் கீழ் உறுப்பினர்களாகத் தெரிந்தனுப்பப்பட வேண்டிய ஆட்களின் பெயர்களைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் தெரிந்தனுப்பப்படுகின்ற வேட்பாளர்களின் பெயர்கள் அதன்பின்னர் முறையான நிருவாக மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(8) ஒரு மாகாணத்தினுள்ளான நிருவாக மாவட்டம் ஒவ்வொன்றிலிருந்தும் தெரிந்தனுப்பப்படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையாதோர் பெண் உறுப்பினர்களாகவிருப்பதை ஆணையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஆயின், உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் இருபத்தைந்து சதவீதமாக அமைகின்ற எண்ணிக்கை ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் உள்ளவிடத்து, முழுவெண்ணானது, இப்பிரிவின் நோக்கத்துக்காக இருபத்தைந்து சதவீதமாக அமையவேண்டிய எண்ணாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், மேலும், இச்சட்டத்தின் நியதிகளின்படி அமைத்துருவாக்கப்பட்டு மாகாணசபையொன்று, இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு இயலாதிருக்கின்றமையின் பயனைக் கொண்டு மட்டுமே சட்டமுறையற்றதாகக் கருதப்படுதலாகாது.

தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை.

58ஆ. (1) ஒரு நிருவாக மாவட்டத்துக்காக ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு மேன்மிகையை விளைவித்து, அதன்மூலம் 58அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தெரிந்தனுப்பப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சுமிடத்து, இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(2) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு, ஒரு நிருவாக மாவட்டத்தில் பெறப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் இருபது சதவீதத்துக்குக் குறைவானதைப் பெற்றுள்ளவிடத்து, அப்போது, இப்பிரிவின் (3) ஆம், 4 ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அரசியற் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தவிர, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளிலிருந்தும் சுயேச்சைக் குழுக்களிலிருந்தும் ஒவ்வொரு மாகாணசபைக்கும் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தெரிந்தனுப்பப்படவேண்டிய பெண் உறுப்பினர்களைப் பகிர்வு செய்தலானது, அத்தகைய நிருவாக மாவட்டத்திலுள்ளான ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினாலும் சுயேச்சைக் குழுக்களினாலும் பெறப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையைக் கவனத்துட்கொண்டு, தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 99அ என்னும் உறுப்புரையில் தரப்பட்டுள்ள பகிர்வு முறையானது, ஏற்ற மாற்றங்களுடன் அதற்கேற்புடையதாதலும் வேண்டும்.

(4) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து ஒரு நிருவாக மாவட்டத்தினுள்ளான எல்லா தேர்தற்றொகுதிகளுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பகிர்வு

செய்யப்பட்ட எண்ணிக்கைக்குக் குறைவாகவிருக்குமிடத்து, அப்போது, உறுப்பினர்களின் எண்ணிக்கையிலான பற்றாக்குறை, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்ற பெண் வேட்பாளர்கள் தவிர, தேர்தற்றொகுதி நிரலில் அல்லது மாவட்ட நிரலில் உள்ள பெண் வேட்பாளர்களிடையேயிருந்து தெரிந்தனுப்பப்படுதல் வேண் டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு, "இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான 'ஓ' என்னும் படிவத்திலுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலுள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவில்-

(அ) "உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இச்சட்டத்தின்கீழ் தகவுடையவரான ஆளொருவரை," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமையற்ற வேட்பாளர்கள் தவிர தேர்தற்றொகுதி நிரலின் அல்லது மாவட்ட நிரலின் வேறெவரேனும் வேட்பாளரை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) "வெற்றிடம் எந்த நிருவாக மாவட்டம் தொடர்பில் ஏற்பட்டதோ அந்த நிருவாக மாவட்டத்துக்கென அக்கட்சியினால் அல்லது குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்நியமனப் பத்திரத்திலிருந்து, அம்மாகாண சபைக்கு அக்கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் கடைசி உறுப்பினருக்கு அடுத்து, அம்மாகாண சபைக்கான உறுப்பினர்கள் தேர்தலில் ஆகக்கூடிய எண்ணிக்கையினவான முந்துரிமைகளைப் பெற்றவரான வேட்பாளர்" என்னும் சொற்க

ளுக்குப் பதிலாக, "தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது உறுப்பினரொருவராகவிருப்ப தற்குத் தகைமையற்றவரான வேட்பாளரொரு வர் தவிர, மாவட்ட நிரலில் அடுத்துள்ள வேட்பாளர்" என்னும் சொற்களை இடுவ தன்மூலமும்.

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலா கப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன்மூலமும் :-

"(3) ஒரு மாகாண சபையின் பெண் உறுப்பினரின் விடயத்தில் வெற்றிடமொன்று (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ், ஏற்படுமிடத்து, அத்தகைய வெற்றிடம், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது உறுப்பினராக விருப்பதற்குத் தகைமையற்ற பெண் உறுப்பினர்கள் தவிர, இயைபான தேர்தற்றொகுதி நிரலிலிருந்து அல்லது மாவட்ட நிரலிலிருந்து ஒரு பெண் வேட்பாள ரின் பெயர் நியமனத்தின்மூலம் மட்டுமே நிரப்பப்படு தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணைகளை நீக்குதல்.*

**25**. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணைகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு, "உறுப் பினர்கள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"மேன்மிகை" என்பது, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு, இச்சட்டத்தின் 58அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி தேர்ந்தெடுப்பதற்கு உரித் துடையதாகவுள்ள எண்ணிக்கைக்கு விஞ்சுதலாக அத்த கைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிலிருந்து அல்லது

சுயேச்சைக் குழுவிலிருந்து மாகாண சபையொன்றுக்கு ஒரு நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை என்று பொருளாகும்;".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**27**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்